பக்கங்கள்: 13

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 28 திங்கட்கிழமை 10.02.2025 கதிர் 094

## இனிது ரகசியம் அல்ல!

நேற்றுப் பகல் 6 மணி நேரம் ஏற்பட்ட மின்வெட்டுக்கு குரங்கே காரணம் என்று கூறியிருக்கிறது ஆளும்தரப்பு. அதுமட்டுமல்ல ஒரு குரங்கு பாய்ந்ததால் ☞2

# கெஹலியவுக்கு வழங்கிய நட்டஈட்டில் ஒரு கிராமத்தையே உருவாக்கமுடியும்

## கிளிநொச்சியில் அமைச்சர் விமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கெஹலிய ரம்புக்வெல்ல தனது வீட்டுக்கு நட்டஈடாக பெற்றுக்கொண்ட பணத்தில், கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கிராமம் ஒன்றையே அமைத்திருக்கலாம் என அமைச்சர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு நேற்று பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர் பிமல் ரத்னாயக்க அங்குள்ள தொடருந்து நிலையத்தில் களஆய்வில் ஈடுபட்டார். 'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் இந்தத் தொடருந்து நிலையத்தை பார்வையிட்ட அமைச்சர், பயணிகளுடனும் கலந்துரையாடினார். அங்கு செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:



போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகபட்சமாக 5 இலட்சம், 7 இலட்சம், இறுதியாக 10 இலட்சம் ரூபாவே வழங்கப்பட்டது. ஆனால், கடந்த கால ☞2

## காத்திருக்கும் 'லிட்ரோ'

பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலைத் திருத்தத்திற்கு நிதி அமைச்சின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு விலை திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் இந்த மாதத்தின் முதல் வாரத்தில் நிதி அமைச்சகத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிவாயு ☞2

## நாணய நிதிய நிபந்தனைகள் 'பட்ஜெட்'டுக்காகக் காத்திருப்பு

2025 ஆண்டுக்கான வரவு --செலவுத் திட்டத்தில் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு கன்னி வரவு-செலவுத் திட்டம் பெப்ரவரி 17 திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளதுடன், மார்ச் மாதம் 21 வாக்கெடுப்பிற்கும் விடப்படவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் ☞2

## தேசிய மின் அமைப்பின் சமச்சீரிமையே நேற்றைய மின்சாரவெட்டுக்குக் காரணம்

### அதற்கும் முன்னைய ஆட்சி மீது பழி

தேசிய மின்சார அமைப்பின் சமச்சீரின்மையாலேயே நேற்று இலங்கை முழுவதும் மின்துண்டிப்பு ஏற்பட்டது என்று மின்சக்தி அமைச்சர் பொறியாளர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

முந்தைய ஆட்சியாளர்களின் திட்டமிடப்படாத மற்றும் குறுகிய பார்வை கொண்ட கொள்கைகளே மின்வெட்டுக்கு வழிவகுத்ததாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாணந்துறை உப மின் கட்டமைப்பில் குரங்கொன்று திடீரென்று பாய்ந்ததமையால் திடீர் மின்தடை ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக நேற்று முற்பகல் நாடு முழுவதும் மின் விநியோகத் தடை ஏற்பட்டிருந்தது. தேசிய மின் கட்டமைப்பின் உறுதிப்பாட்டைப் பராமரிப்பதில் உரிய கவனம் செலுத்தத் தவறிய முந்தைய ஆட்சியாளர்களின் குறுகிய பார்வை கொண்ட செயல்களாலும், ☞2

## விரிவான தகவல் இன்று

நாடு முழுவதும் நேற்று ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பான விரிவான தகவல்களை இலங்கை மின்சார சபை இன்று வெளியிடும் என்று அதன் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சம்பவம் குறித்து மின்சார சபையின் உள்ளக குழு ஊடாக விசாரணை நடத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இந்த சம்பவம் குறித்து மின்சக்தி அமைச்சும் விரிவான விசாரணையை நடத்தி வருவதாக அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்தார்.

இதேபோன்ற நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை பரிந்துரைக்க தொடர்புடைய விசாரணை ☞2

## தொடருந்து நிலையங்களும் நேற்று மின் தடையால் பாதிப்பு

நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக, தொடருந்து கடவைகளில் சமிக்ஞை அமைப்புகளின் செயல்பாட்டுகள் பாதிக்கப்பட்டன.

இதன் காரணமாக, தொடருந்துப் போக்குவரத்திலும் நேற்று இடையூறுகள் ஏற்பட்டதாக ரயில்வே ☞2

### 43 முன்னாள் எம்.பிக்களிடமும்

## நட்டஈட்டை மும்மடங்காக திருப்பி அறவிடவேண்டும்

### அமைச்சர் நளின் காட்டம்

நாட்டின் அசாதாரண நிலையின் போது வீடுகள் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவித்து 43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட நட்டஈட்டை மீளப்பெற்றுக் கொள்ளவேண்டும். இது நாடு என்ற வகையில் செலுத்த வேண்டிய நட்டஈடு அல்ல. அது அவர்கள் செய்த தீமைகளுக்குக் கிடைத்த பயனாகும் என தொழில் கல்வி பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் ☞2

## பொய் சொல்லி ஆட்சி பிடித்தோர் விவசாயிகளைக் கைவிட்டனர்

### எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

பொய்களை சொல்லி மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட்டு, ஆட்சிக்குவந்தபின்னர் விவசாயிகளைக் கைவிட்டுள்ளனர். என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவர், ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை தேர்தல் தொகுதி அமைப்பாளர் சுதத் விக்ரமரத்னவின் தலைமையில் அவிசாவளையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் மக்களை வாழ வைக்க முடியாத ஆளும்தரப்பே காணப்படுகின்றது. மலிவு விலையில் தேங்காய், அரிசி மற்றும் உப்பு ☞2

## நுரைச்சோலை மின்உற்பத்தி நிலைமே இரவு நேர மின்வெட்டுக்குக் காரணமாம்

நுரைச்சோலை நிலக்கரி மின் நிலையத்தில் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்கள் செயலிழந்ததால், இலங்கையின் பல பகுதிகளில் நேற்றிரவு மீண்டும் மின்சாரம் தடைப்பட்டதாக இலங்கை மின்சார சபை உறுதிப்படுத்தியுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்கள் செயல்படாததால், சில பகுதிகளுக்கு மின்சாரத்தை மட்டுப்படுத்தவேண்டியிருந்தது என்று மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார். ☞2

## கோமாளியொன்று இம்முறை நாடாளுமன்றம் வந்துள்ளதாம்

### இளங்குமரன் எம்.பியின் கருத்து

உலகில் தமிழர்களுக்கென தனி மதிப்பு உள்ளது. அந்த மதிப்பை சீர்குலைப்பதற்கு அவ்வப்போது துரோகிகளும், கோமாளிகளும் வந்துசெல்வதும் வழமை. அப்படிதான் இம்முறையும் கோமாளியொன்று நாடாளுமன்றம் வந்துள்ளதென தேசிய



மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட ☞2

## அதிபர், ஆசிரியர் சங்கங்கள் பிரதமருடன் நேற்றுப் பேச்சு

அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஆசிரியர் அதிபர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் கல்வித்துறையில் முககொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் அதற்கு உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறும் தொழிற் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இதனிடையே இந்த சந்திப்பின் பின்னர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் 2 இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட அதிபர்களும் கல்வித்துறையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இது தொடர்பில் நாம் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம்.

குறிப்பாக பதவி உயர்வு தொடர்பில் விடயங்களை முன்வைத்தோம். இது குறித்து அரசசேவை ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய புதிய சுற்றுநிருபம் வெளியிட உள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த வருடம் முதல் பதவி உயர்வுகள் ☞2

## இனி இது .....

ஏற்பட்ட மின் தடை இலங்கை முழுவதற்கும் பரவியதற்கு முன்னாள் ஆட்சியாளர்களே காரணம் என்றும் கூறியிருக்கின்றது. வீதியில் யாராவது தடுக்கி விழுந்தால் அதற்கும் முன்னாள் ஆட்சியாளர்கள்தான் காரணம் என்றுதான் ஆளும்தரப்பினர் கூறுவார்கள் போலுள்ளது.

அது போகட்டும். பாணந்துறையில் உள்ள உபமின் நிலையத்தில் குரங்கு பாய்ந்ததே மின் தடைக்கான காரணம் என்று எரிசக்தித்துறை அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். இதைக் கேட்டபோது எனக்கு ஓரிரு வருடங்களுக்கு முன்னர் கேட்ட 'கபுட்டா'தான் ஞாபகத்திற்கு வந்தது. ராஜபக்சக்களின் ஆட்சி ஆட்டம் காணத் தொடங்கியிருந்த காலகட்டத்தில் இந்தச் சொல் பிரபலமடைந்தது.

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபயவின் ஆட்சியை எதிர்த்து மக்கள் கிளர்ச்சியில் ஈடுபடத் தொடங்கியிருந்த நேரம் அது. ராஜபக்சக்களுக்கு எதிராகத் தீவிரமான உணர்வலைகள் பரவியிருந்தன.

அப்போது நிதி அமைச்சராக இருந்தவரான பஸில் ராஜபக்ச சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் காகத்தைக் குறிப்பிடுவதற்கான ஆங்கிலப் பதமான 'குரோ' என்பதைக் கூறாமல் அதன் சிங்களப் பதமான 'கபுட்டா' என்பதையே கூறி இருப்பார். ராஜபக்சக்களுக்கு எதிரான தீவிர உணர்வுகளின் பின்னணியில் அவர்களை எள்ளி நகையாடி, வைத்துச் செய்வதற்கு சமூக ஊடகங்களுக்கு கிடைத்த அவல் மாதிரியானது இந்த விவகாரம்.

அந்த 'வைப்' பின்னர் போராட்டக் களங்களுக்கும் பரவியது. பஸிலை 'கபுட்டா' என்றே மக்கள் அழைக்கத் தொடங்கினார்கள். 'கபுட்டா கா.... கா...." என்ற பாடல் இயற்றப்பட்டது. 'கோட்டா கோ கம', 'மைனா கோ கம' என்று கோட்டாபயவையும் மகிந்தவையும் ஊருக்குத் திரும்பச் சொல்லும் முழக்கங்கள் வீதிப் போராட்டங்களில் நிறைந்திருந்தது போலவே 'கபுட்டா கா... கா...' முழக்கமும் ஆக்கிரமித்திருந்தது. அது ஒரு அலையாகப் பரவிப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதுபோன்றே 6 மணி நேர மின் தடைக்கு குரங்கே காரணம் என்று அமைச்சர் கூறியிருப்பது 'வண்டுர' என்ற சிங்களச் சொல் மூலம் இப்போது பிரபலமடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏற்கனவே இலங்கைக்குத் தீ மூட்டினான் அனுமன் என்று இதிகாசம் கூறுகையில், அவன் வாரிசுகள் இன்றும் இலங்கையை இருளில் மூழ்கடிக்கச் சதி செய்கிறார்கள் என்கிற 'சதிக் கோட்பாடு'கள் கூடப் பிரபலமாகலாம். யார் கண்டார்?

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## கெஹலியவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள் பல இலட்சங்களை அவர்களது வீடுகளுக்காக நட்டஈடாக பெற்றுக்கொண்டுள்ளனர். உதாரணமாக கெஹெலிய ரம்புக்வெல்ல பெற்ற நட்டஈட்டுத் தொகையை வைத்து இங்கு கிராமம் ஒன்றையே அமைத்திருக்கலாம்.

பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகள் நாடு முழுவதும் காணப்படுகிறது. அது போல கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊதியம் போதாது. அவர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படவேண்டும். அந்தப்பிரச்சினைக்கு மக்களுடனும் கலந்துரையாடி தீர்வு எட்டப்படவேண்டும். அதனை விரைவில் செய்வோம்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் மின்பிறப்பாக்கி இயங்காத விடயம் தொடர்பில் எமது மாவட்ட அமைப்பாளர் பார்வையிட்டு, சுகாதார அமைச்சுக்கு தகவல் வழங்கியதும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## தேசிய மின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்பத்தைப் பற்றிய புரிதல் இல்லாத மோசமான வழிகாட்டுதலாலும் இந்த நிலைமை ஏற்பட்டதாக ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளன.

இருப்பினும், இந்த நிலைமைக்குப் பின்னால் உள்ள காரணங்களை நாங்கள் முழுமையாக ஆராய்ந்து, இது மீண்டும் நிகழாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். மின்விநியோகத் தடையால் பெரிதும் இன்னல்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு எமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம், மேலும் மின்சார அமைப்பை மீட்டெடுப்பதில் கடினமாக உழைத்து எங்களுக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி.

எமது கட்டமைப்பில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளது. சூரியசக்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. தற்போதைய நிலையில் சூரிய சக்தியை பயன்படுத்துவதற்கான கட்டமைப்பு உரியவாறாக இல்லை. அதனை வெளியே கொண்டுசெல்கின்றபோது அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்றார்.

## நுரைச்சோலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை முழுவதும் ஏற்பட்ட மின்வெட்டைத் தொடர்ந்து மீண்டும் ஆறு மணிநேரத்தின் பின்னர் நிலமைகள் சீரடைந்த நிலையில் மீண்டும் நேற்று மின்சாரத் தடை ஏற்பட்டது.

## கோமாளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதேசவாதம்பேசி தமிழர்களைப் பிரித்தாள்வதற்காக கைக்கூலியாக வந்துள்ள இந்த நபர், கத்தரிதோட்ட வெருளிகள் பற்றி கதைப்பது வெட்கக்கேடாகும்.

இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் உள்ளன. எவரும் இரண்டாந்தர பிரஜைகள் அல்லர் என்ற நிலைப்பாட்டிலேயே தேசிய மக்கள் சக்தி உள்ளது.

நாட்டில் வாழும் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கக்கூடிய கட்சிதான் தேசிய மக்கள் சக்தி. மாற்றம்வேண்டும் என்பதற்காகவே யாழ். மக்களும் எமக்கு அமோக ஆதரவை வழங்கினர். இந்த மக்கள் ஆணையை புரிந்துகொள்ள பக்குவமில்லாத அரசியல் கோமாளி, தற்போது விமர்சன அரசியலை முன்னெடுத்து வருகின்றது.

சமூகவலைத்தளங்களில் பிரபல்யமடைவதற்காக வீரவசனங்களை பேசி, தன்னையும், தன்னை சூழவுள்ள ஒரு சிலரைப் பற்றியும் மட்டுமே பேசும் கோமாளிகளெல்லாம் தலைவர்களாக முடியாது என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

எமது மலையக உறவுகள் தமிழர்களின் சுயநிர்ணய கோரிக்கைக்கு எதிராக நின்றதில்லை. உரிமைப் போராட்டங்களைக்கூட ஆதரித்துள்ளனர். எனவே, இணைந்து வாழும் எங்களைப் பிரதேச வாதத்தை கிளப்பிவிட்டுப் பிரித்தாள முடியாது என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம். தென்னிலங்கையில் மஹிந்தவும், அவரின் சகாக்களும் செய்த அரசியல் பாணியை, வடக்கில் செய்வதற்கு இந்த கோமாளி முற்படுகின்றது என்றார்.

## அதிபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படவில்லை. ஆசிரியர்கள் சம்பளம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் எமக்கு வாக்குறுதியளித்தார்.

எனவே எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என நாம் நம்புகிறோம். அதேபோன்று இதன்போது ஆசிரியர் அதிபர் ஆசிரிய ஆலோசகர்கள் கல்வித்துறையில் முகங்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வைப்பெற்றுத்தருவதாக பிரதமர் எமக்கு உறுதியளித்தார் என்றார்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் தெரிவித்துள்ளது. தொடருந்துக் குறுக்கு வீதிகளின் பாதுகாப்பு கடவைகளை செயற்படுத்துவதிலும் பாதிப்புகள் ஏற்பட்டன.

இது தொடர்பாக பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கை யுடன் செயல்படுமாறு தொடருந்துத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. மேலும், மின்தடை காரணமாக தொடருந்து நிலையங்களில் அறிவிப்புகள் வெளியிடுவதிலும் சிக்கல் ஏற்பட்டது.

## விரிவான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாடு முழுவதும் பல்வேறு காலகட்டங்களில் இவ்வாறு மின் விநியோகத் தடை ஏற்பட்டுள்ளது, இறுதியாக 2023 டிசம்பர் 9ஆம் திகதி மின்வெட்டு ஏற்பட்டது, மேலும் மின்சாரத்தை மீட்டெடுக்க சுமார் 6 மணிநேரம் சென்றது.

கொத்மலையிலிருந்துபியகமவரையிலான மின்சார விநியோகக் கம்பியில் ஏற்பட்ட கோளாறுதான் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. இதேபோன்று, 2016 மார்ச், 2020 ஓகஸ்ட் மற்றும் 2021 டிசெம்பர் மாதமும் நாடு முழுவதும் மின்வெட்டு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காத்திருக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலைகளுக்கு ஏற்ப நாட்டின் எரிவாயு விலை மாதந்தோறும் திருத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 4 ஆம் திகதி அறிவிக்கப்பட்டு வருகிறது.

இருப்பினும், பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலை திருத்தம் இன்னும் அறிவிக்கப்படாமை குறித்து நிறுவனத்திடம் வினவியபோது,

எரிவாயு விலை திருத்தம் தொடர்பான அனைத்து பரிந்துரைகளும் ஏற்கனவே நிதி அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, மேலும் அமைச்சகத்தின் ஒப்புதல் இல்லாமல் அதை அறிவிக்க முடியாது என அதன் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அடுத்த வாரத்திற்குள் தொடர்புடைய பரிந்துரைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், கடந்த சில மாதங்களாக எரிவாயு விலையில் எந்த மாற்றமும் மேற்கொள்ளபடவில்லை என்றும், உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரித்த போதிலும், மக்களின் சிரமங்களை கருத்திற்கொண்டு அவர்களைப் பாதிக்காத வகையில் எரிவாயு விலையை மாற்றாமல் பராமரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலையில் எந்த மாற்றமும் இருக்காது என்று லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் வேகபிட்டிய தெரிவித்தார்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோசாக் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியுள்ளதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை இன்னும் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தில் உள்ளது. மேலும் இந்த மாத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை இலங்கை ஆளும்தரப்பு முன்வைக்க உள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நாணய நிதியத்தின் எதிர்பார்ப்புகள் அல்லது நிபந்தனைகள் எத்தகையதாக உள்ளது என்று கேள்வி எழுப்பியுள்ளீர்கள்.

2024ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி இலங்கையில், சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வு குறித்து பணியாளர் மட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. இதன் பிரகாரம் நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 333 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கும்.

எவ்வாறாயினும், இந்த நிதியுதவிக்கான மேலதிக உறுதிப்பாடுகளுக்கான கலந்துரையாடல்கள் எதிர்வரும் வாரங்களில் நடைபெற உள்ளது. இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரல் பாராட்டத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. 2024ஆம் ஆண்டின் கடைசி இரு காலாண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் 5.5 சதவீதம் வளர்ச்சியடைந்தது.

2024ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் சராசரி பணவீக்கம் இலக்கைவிட மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும் 2024ஆம் ஆண்டின் இறுதியில் சர்வதேச இருப்புக்கள் 6.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை கருத்தில் கொள்ளும்போது, கடந்த நவம்பரில் எட்டப்பட்ட பணியாளர் நிலை ஒப்பந்துடன் அது தொடர்புபடுகிறது.

எனவே, விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில், 2025 வரவு-செலவு திட்டத்தை ஆ-ளும்தரப்புச் சமர்ப்பிப்பது முக்கியமாகும் என்றார்.

## பொய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாங்க முடியாத நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க முடியாத அரசு எவ்வாறு மக்களை வாழ வைக்கப்போகிறது?.

தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது நெல்லுக்கு 150 ரூபா உத்தரவாத விலையைத் தருவதாகக் கூறினர், ஆனால் இன்று அவர்கள் வயல்வெளிகளுக்குச் சென்று விவசாயிகளைச் சந்திப்பதற்கே பயப்படுகின்றனர்.

பொய்களை சொல்லி மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட்டு, ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயிகளைக் கைவிட்டுள்ளனர். இன்று அரச உத்தியோகத்தர்கள் ஆளும்தரப்பின் விருப்பத்தின் பேரில் இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு ஆதரவானவர்கள் மாத்திரம் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நாட்டு மக்களை நிர்க்கதியாக்கும் ஆளும்தரப்பின் கொள்கைகளுக்கு எதிராக முன்நிற்பது மட்டுமன்றி பாரபட்சம் மற்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாவோருக்கு நீதியை நிலைநாட்டும் வேலைத்திட்டமொன்றை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும்.

பெரும்பான்மையான மக்கள் இன்று கடன் சுமைக்கு ஆளாகியுள்ளனர். நலமாக வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. உற்பத்தி, நுகர்வு, முதலீடு என்பன குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன. தங்கத்தை அடகுவைத்து விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தாலும் உரங்களுக்கு நிலையான விலை வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் கடன் சுழற்சியில் மீண்டும் சிக்கியுள்ளனர்.

கூட்டுறவு சங்கங்களில் இருந்து கடன் வாங்குவது அதிகரித்து காணப்படுகின்றன. இவர்களின் வருமான மூலங்கள் சுருங்கிபோயுள்ளன. அண்மையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்றபோதும் அவர்களுக்கு உரிய தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை. சேவை செய்யவேண்டும் என்றே மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை இந்த ஆட்சியாளர்களுக்கு பெற்றுத் தந்தனர். பழைய பாணியிலேயே இவர்களும் ஆட்சி நடத்தி வருகின்றனர்.

மக்கள் ஆணைக்கு இந்த ஆளும்தரப்பு நியாயத்தை நிலைநாட்ட வேண்டும். காலம் தாழ்த்தல், இழுத்தடிப்பு அதற்குத் தீர்வாகாது. மக்கள் உங்களிடமிருந்தும் இவற்றை எதிர்பார்க்கவில்லை. பிரச்சினைகள் எழும்போது சமாளிப்புக்குப் பல விடங்களை முன்வைத்து வருகிறீர்கள். ஆனால் எடுத்த நடவடிக்கைகள் ஒன்றுமில்லை. அதிகாரம் உங்கள் கைவசமே காணப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் துன்பப்படும் மக்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை மக்கள் மன்ற அலுவலகமாக மாற்றி தீர்வுகளை வழங்கும் வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிப்போம் என்றார்.

## நட்டஈட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு பொறுப்பேற்று 70 நாட்களே கடந்துள்ளன. இந்த ஆளும்தரப்பு மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இருப்பினும் ஒரு சிலர் ஆளும்தரப்புக்கு எதிராகச் சூழ்ச்சிகளை முன்னெடுத்துள்ளனர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான கூட்டமைப்பு கதிரை சின்னத்தில் தேர்தலில் களமிறங்க நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அம்பாறைமாவட்ட சகலஉள்ளூராட்சிசபைகளிலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான கூட்டமைப்பினர் கதிரை சின்னத்தில் தேர்தலில் களமிறங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன் ஓர் அங்கமாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த காலங்களில்



உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களாக, உப தவிசாளர்களாகஇருந்தவர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிராந்திய முக்கியஸ்தர்களையும் அம்பாறை தனியார் விடுதிக்கு நேற்று அழைத்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமை நிர்வாகிகள் கலந்துரையாடினர்.

இந்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி செயலாளர் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, பொருளாளர் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி ஸ்ரீயாணி விஜேவிக்ரம ஆகியோர் கலந்து கொண்டு அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் நிலைப்பாடு, தேர்தல் சாதக, பாதங்கள் சமகால அரசியல் முன்னெடுப்புகள், விவசாயி களினதும் ஏனைய தொழிலாளர்களினதும் அன்றாட பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.





# தம்பலகாமத்தின் இனநல்லிணக்கத்துக்கான செயற்பாட்டை மேம்படுத்தும் களப் பயணம்

(ஹஸ்பர்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் பிரிட்டிஷ் கவுன்சிலின் தலைமையில் சேர்ச் போர் கொமண்ட் ஆல் நாடளாவிய ரீதியில் எஸ்.எவ்.சி.ஜி. திட்டமானது செயற்படுத்தப்படுகின்றது. எஸ்.எவ்.சி.ஜி. திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்கானது, இலங்கையில் இலக்கு வைக்கப்பட்ட ஆறு மாவட்டங்கள் மற்றும் பன்னிரண்டு பிரதேச செயலக பிரிவுகளில் முரண்பாடுகளை சாதகமான முறையில் நிலைமாற்றம் செய்யவும் மற்றும் வன்முறை அதிகரிப்பதைத் தடுக்கவும் உள்ளூர் மட்ட மாற்றுவழி பிணக்கு தீர்வு வழிமுறைகளை வலுப்படுத்துதல்.

இதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் எஸ்.எச்.சி.ஜி. இணைந்து விழுது ஆற்றல் மேம்பாடு மையம் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.



இதன் தொடர்ச்சியாக தம்பலகாம பிரதேசம் பல் கலாசார பிரதேசதமாக காணப்படுவதால் தொடர்ச்சியாக இன நல்லிணக்கமின்மை செயற்பாடுகளுகள் அதிகரித்து வருவதால் இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயற்பாட்டில் தம்பலகாமாம் ஏ.னு.ஆர். குழு செயற்பட்டு வருகிறது அந்த வகையில்

வெள்ளிக்கிழமை திகதி மாற்றுவழி பிணக்கு



தீர்வு குழுவினரின் ஏற்பாட்டில் தம்பலகாம பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு சமயத்தவர்களின் வணகஸ்தலங்களின் கலை, கலாசார, பண்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் அவர்களுடைய இன நல்லிணக்கத்தை பாதிக்கும் செயற்பாடுகள் தொடர்பாகன விடயங்கள் என்பற்றை அறிந்து கொள்ள வெள்ளிக்கிழமை முள்ளிப்பொத்தானை 96 இல் அமைந்துள்ள ஸ்ரீஅக்ரபோதி பௌத்த விகாரை , புஹாரி ஜும்ஆ பள்ளிவாயல் , தம்பலகாமம் ஆதி கோணஸ்வர ஆலயம் என்பவற்றுக்கு

பௌத்த ,இந்து, இஸ்லாமிய ,கிறிஸ்தவ மதத் தலைவர்களின் வழிகாட்டலின் கீழ் அனைத்து மத நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் தம்பலகாம ஏ.டி.ஆர். மன்ற குழுவினர் ஒவ்வொரு சமூகத்தின் கலாசார விடயங்களை கற்று கொண்டதோடு இன நல்லிணக்கத்தை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர். அத்தோடு எதிர்காலத்தில் அனைத்து சமய தலைவர்களையும் ஒன்றிணைத்து தம்பலகாம பிரதேசத்தில் இன நல்லிணக்க குழுவை உருவாக்குவதாக இதன் போது ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

# தில்லையூர் மீனவர் சங்கத்தின் கூட்ட மண்டபம் மறுசீரமைப்பு

(எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி தில்லையூர் மீனவர்களுக்கான கூட்ட மண்டபம் நீண்ட நாள்களாக புனரமைப்பு செய்யப்படாமல் இருந்த நிலையில் மீனவ சங்கத்தின் தலைவர் சபுறுல்லாஹ்வின் முயற்சியின் ஊடாக கடல்சார் நிறுவனமான என்.எட்.ஐ கிராப் கவுன்சிலின் நிதி வழங்கல் மூலம் மேற்படி கூட்ட மண்டபம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்பு செய்யப்பட்ட கற்பிட்டி தில்லையூர் மீனவ சங்க கூட்ட மண்டபத்தை பார்வையிட்ட தில்லையூர் தாருல் அர்கம் பள்ளிவாசல் பேஷ் இமாம் றிப்கான் (றஹ்மானி) மற்றும் பள்ளிவாசல் தலைவர் அன்வர்தீன் ஆகியோர் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.



# தைலாப்பொட்டி நூல் சாய்ந்தமருதில் வெளியீடு

(ஸாகிர்)

2024 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் தெரிவு செய்யப்பட்ட கலாபூஷணம் ஏ. பீர் முகம்மது எழுதிய 'தைலாப்பொட்டி' நூலின் வெளியீட்டு விழா சனிக்கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அரங்கில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவுக்கு கௌரவ அதிதிகளாக சபுத்தி தவிசாளர் கலாநிதி தமீர மஞ்சு, இலங்கை நீதிக்கானஷ் மையத்தின் தலைவர் சட்ட முதுமாணி எச்.ஐ.எம். ஸஹ்பி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் ஓய்வுநிலை அதிபர் திருமதி அ. பேரின்பராஜா, சபுத்தி பொதுச்செயலாளர் திருமதி இரோசானி கல்ஹேன ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித் துறைத் தலைவர் கலாநிதி அமரசிரி விக்கிரமரத்ன, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் எம். அப்துல் ரசாக், அக்கரைப்பற்று பேஜஸ் புத்தக இல்லத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிராஜ் மசூர் மற்றும் சிரேஷ்ட எழுத்தாளர் செங்கதிரோன் ஆகியோர் நிகழ்வில் சிறப்புரையாற்றியதோடு, கல்விமான்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், நூலாசிரியரின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட இன நல்லுறவைப் பேணும் வகையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினத்தவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தமை விசேட அம்சமாகும்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விசாரணையும் தண்டனையும் அவசியம்

முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சரான கெஹலிய ரம்புக்வெல்ல தனது வீட்டுக்கு நட்டஈடாக பெற்றுக்கொண்ட பணத்தில், கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கிராமம் ஒன்றையே அமைத்திருக்கலாம் என அமைச்சர் பிமல் ரத்னாயக்க தெரிவித்திருக்கிறார்.

கிளிநொச்சிக்கு நேற்று பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர் பிமல் ரத்னாயக்க அங்குள்ள தொடருந்து நிலையத்தில் களஆய்வில் ஈடுபட்ட பின்னர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

“போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகபட்சமாக 5 இலட்சம், 7 இலட்சம், இறுதியாக 10 இலட்சம் ரூபாவே வழங்கப்பட்டது. ஆனால், கடந்த கால அமைச்சர்கள் பல இலட்சங்களை அவர்களது வீடுகளுக்காக நட்டஈடாக பெற்றுக்கொண்டுள்ளனர். உதாரணமாக கெஹெலிய ரம்புக்வெல்ல பெற்ற நட்டஈட்டுத் தொகையை வைத்து இங்கு கிராமம் ஒன்றையே அமைத்திருக்கலாம்” என்றார் அவர்.

அவர் கூறுவது உண்மைதான். முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தாக்கிச் சேதமாக்கப்பட்டதற்காக வழங்கப்பட்ட இழப்பீடு தொடர்பான விவரங்களை இந்த ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் வெளியிட்டபோது வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களிடம் இதே கருத்து, எண்ணம் தோன்றியதைத் தவிர்க்க முடியவில்லை என்பதே உண்மை. போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மக்களின் வீடுகள் போரால் சேதமாக்கப்பட்டபோது மிகச் சொற்பமான இழப்பீடே வழங்கப்பட்டது. அதிலும் அரச பணியாளர்களாயின் அதிலும் ஒரு பகுதியே வழங்கப்பட்டது. ஆனால், ஆட்சியாளர்களான அரசியல்வாதிகளுக்கு மட்டும் அள்ளி அள்ளிக் கொடுத்துள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, வடக்கு கிழக்கில் வீடற்றவர்களுக்கு அரச உதவியின் கீழ் அல்லது அரச சார்பற்ற நிறுவங்களின் உதவியின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்குக்கூட ஆகக்கூடுதலாக 12 லட்சம் ரூபா வரையிலேயே வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு ஆகக் குறைந்தது சேத இழப்பீடாக 5 லட்சம் முதல் பலப் பல கோடிகள் வரை வழங்கப்பட்டுள்ளது. இது எந்த வகையில் நியாயம்? மக்களுக்கு கிள்ளித் தெளித்த ஆளும்தரப்பு மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அள்ளித் தெள்க்கிறது என்பது ஓரவஞ்சனை, பாரபட்சம் என்று தெரிந்திருந்தும் செய்கிறார்கள்.

இந்த அநியாயம் வெறுமனே நாடாளுமன்றத்திலும் மக்கள் அரங்கத்திலும் பேசப்படவேண்டிய விடயம் மட்டுமல்ல. அது முறையான வகையில் விசாரிக்கப்பட்டு, தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அரச நியமங்களுக்கு உரிய வகையிலான இழப்பீடுகள் மட்டும் வழங்கப்பட்டு மீதிப் பணம் திரும்பப் பெறப்படவேண்டும். மக்களின் பணத்தை வீணடித்தவர்களும், அதனை உரிமைகோரிப்பெற்றவர்களும் தமது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளனர். அதற்காக அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். மீண்டும் அத்தகைய முறைகேட்டாளர்கள் அரசியல் களத்திற்குள் நுழைய முடியாதபடி அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

ஆளும்தரப்பு தனது அரசியல் இலாபத்திற்காக இத்தகைய விடயங்களைப் பயன்படுத்துவதை நிறுத்தி உரிய வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# உக்ரைன் – ரஷ்ய போர்க் களத்தில் கொல்லப்படும் சிறிலங்கா வீரர்கள் !

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

அண்மையில் ரஷ்ய - உக்ரைன் மோதல்களில் இலங்கையின் பல முன்னாள் இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக சிறிலங்கா அரசு உறுதிப்படுத்தியுள்ளது.



தனியார் ராணுவ கூலிப்படைகளுக்கு வன்முறைகள் ஒரு பொருட்டே இல்லை. கொடூரங்களை தவிர வேறு எதுவும் அவர்களுக்கு மீதம் இருக்காது. அதிக கூலி, அதிக கொடுமைகள் என்ற கோட்பாட்டில்தான் இந்த தனியார் ராணுவப்படைகள் செயல்படுகின்றன.

### உக்ரைன் - ரஷ்யாவில் கூலிப்படை:

உக்ரைன் - ரஷ்ய போரில் கூலிப்படையாக இணைந்துள்ள இலங்கையர்களில் 2025 ஜனவரி 20 ஆம் திகதி வரையில் 59 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அண்மையில் தெரிவித்தார்.

உக்ரேனிய போரில் சிறிலங்காவின் பல இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக கடந்த ஆண்டு வெளியான தகவல்கள் தெரிவித்தன. கடந்த சில ஆண்டுகளில் பல இலங்கையர்கள் உக்ரைனிய ராணுவத்தில் கூலிப்படைகளாக இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ரஷ்ய இராணுவத்தில் கடந்த சில ஆண்டுகளில் 554 இலங்கையர்கள்




இணைந்துள்ளதாகவும், அவர்களில் யாரும் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையின் நூற்றுக்கணக்கான முன்னாள் படைவீரர்கள் உக்ரேனிய எல்லையிலுள்ள போர்க்களங்களில் உயிரிழப்பதாக, அங்கிருந்து தப்பிய முன்னாள் படைவீரர் ஒருவர் பரபரப்பு தகவலை கடந்த ஆண்டு தெரிவித்திருந்தார்.

இலங்கையிலிருந்து பலகுழுக்களால் வெளிநாட்டு வேலைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட முன்னாள் படைவீரர்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உக்ரைன் - ரஷ்ய போர்களங்களிற்கு இலங்கையில் ஆட்களை சேர்ப்பது கடந்த வருடத்தில் தீவிரமடைந்தது.

இதே வேளை கியுபா போன்ற இலத்தீன் நாடுகளில் இருந்தும் பெருமளவு கூலிப்படையினர் ரஷ்யாவில் காணப்படுகின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இந்தியா - நேபாள கூலிப்படைகள்:

உக்ரைனில் தனியார் ராணுவ கூலிப் படையில் சேர்வதற்கு உலகம் முழுவதும் இருந்து பலர் ஆர்வமாக இருப்பதாக செய்திகள் வெளிவந்தன.

குறிப்பாக இந்தியா, நேபாள நாட்டிலிருந்து ஏராளமான இளைஞர்கள், முன்னாள் ராணுவ

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# உக்ரைன் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

வீரர்கள், இத்தகைய தன்னார்வ இராணுவ குழுவில் சேர்கிறார்கள் என்று ஓர் செய்தி வெளிவந்தது.

அவ்வாறு சேரக்கூடிய வீரர்களுக்கு ஓராண்டுக்குப் பிறகு அந்நாட்டு குடியுரிமை வழங்கப்படும் என்ற சலுகை இருப்பதாகவும் அதனால், மேலும் பலர் சேருகிறார்கள் என்றும் தெரிகிறது. நேபாள அரசு இது அவர்களுடைய தனிப்பட்ட விஷயம், நாங்கள் என்ன செய்ய முடியும் என்ற வகையில் கையை விரித்துக் கொண்டார்கள்.

இந்திய அரசு, நேபாள வீரர்களை ராணுவத்தில் எடுப்பதை நிறுத்திவிட்டது மட்டுமல்ல, அக்னி பாத் என்ற பெயரால் நிரந்தர ராணுவ பணியை ஒழித்துக் கட்டியதும் இதற்கு முக்கிய காரணம் என்றும் வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்கள் இதுபோன்ற அண்டை நாடுகளில் இணைவது இந்தியாவுக்கு ஆபத்து என்று தெரிவித்துள்ளது.



**ரஷ்ய வாக்னர் கூலிப் படைகள்:**

முன்பு ரஷ்யாவில் இயங்கிய தனியார் ராணுவப் கூலிப்படையான வாக்னர் குழுவும் (Wagner Group), உக்ரைன் யுத்தத்தில் தீவிரமாக களமாடியது. ஆனால் 2023 ஜூனில் தளபதி எவ்கேனி பிரிகோஷின் யுத்த களத்தில் இருக்கும் போது ரஷ்ய இராணுவ தலைமைக்கு எதிராக கலகத்தை ஆரம்பித்தார்.

ஆயினும் 24 மணி நேரத்தில் அவர் அறிவித்த கலகம் முடிவுக்கு வந்தது.

வாக்னர் குழுவின் கலகத்தை ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புடின் மக்களுக்கு எதிரான தேசத்துரோகம் என்று குற்றம் சாட்டி, ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படும், மரண தண்டனை உட்பட சட்ட ரீதியான அனைத்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

உடனடியாக பிரிகோஷின் தனது கலகத்தை வாபஸ் வாங்குவதாக அறிவித்தார். யுத்த காலத்தில் இது ஒரு மோதலாக மாற வேண்டாம், அப்படிப்பட்ட மோதல் உக்ரைன் யுத்தத்திற்கு ரஷ்யாவிற்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்ற பின்புலத்தில் அவர் மீதான சட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு பெலாரஸ் நாட்டில் தஞ்சமடைய அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் அவர் டூலா (Tula) நகர விமான விபத்தில் கொல்லப்பட்டார். இந்த கலகத்தை அடுத்து விளாடிமிர் புடின் ரஷ்ய ராணுவத்தை ஒன்றுபடுத்தி இருப்பதுடன், மக்களின் ஆதரவையும் அதிகப்படுத்தி இருப்பதாக கள நிலவர தகவல்கள் தெரிவித்தன.

**ஆட்கடத்தலில் இராணுவ அதிகாரிகள்:**

ரஷ்ய உக்ரைன் போரில் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை கூலிப்படையாக பயன்படுத்தி ஆட்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட மேலும் பலர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை அரசு கடந்த ஆண்டு தெரிவித்தது.




தற்போது இலங்கை இராணுவத்தில் பொது மன்னிப்புக்காக சுமார் 15,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 357 ஆக காணப்பட்டது. அத்துடன் சட்டவிரோதமான முறையில் சேவையிலிருந்து விலகி மீண்டும் பணிக்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை 799 என அறிவிக்கப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி அங்கவீனமடைந்த அல்லது யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு 55 வயது வரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் பல முன்னாள் இராணுவ வீரர்கள் கூலிப்படையாக அனுப்பப்படுவதற்கு, அரசின் உயர் அதிகாரிகளும் பொறுப்பு என்றே கூறப்படுகிறது.

இதேவேளை 2020 ஆம் ஆண்டு மட்டும் தனியார் ராணுவ கூலி படைகளுக்கான

அமெரிக்காவின் முதலீடு 224 பில்லியன் டாலர் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. ஆனால் 2030 ஆம் ஆண்டு இது 457 பில்லியன் டாலர் அளவிற்கு உயரம் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது.

அனேகமாக ஒரு நாட்டின் ராணுவத்திற்கு சமமாக தனியார் ராணுவ கூலிப்படைகளும் இன்றைய தினம் உருவாகிவிட்டது அல்லது உருவாக்கப்பட்டுள்ளது என்றே கருத வேண்டியிருக்கிறது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir




# பாரதி இராஜநாயகம்
# (சிரேஸ்ட ஊடகவியலாளர்)

மூத்த ஊடகவியலாளரும் மாலைக் கதிர், தமிழர் பொருண்மியம் பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியருமான இராசநாயகம் பாரதியின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழாத் துயரும் அடைந்தோம். அன்பும் பண்பும் பொறுமையும் திறமையும் கொண்ட பாரதியின் இழப்பு தமிழ் ஊடகத்துறைக்கும் கிறீன் மீடியா ஊடக இல்லத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அவரது ஆன்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அதேநேரம் அவரது மறையால் துயரத்தின் ஆழத்தில் புதைந்திருந்தும் அவரது குடும்பத்தினருடன் துயரத்தையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

நிர்வாக இயக்குநர், ஆசிரியர், ஊடகர்கள், பணியாளர்கள்
பசுமை ஊடக இல்லம்
Green Media House (pvt) ltd.

# புலமையாளர்கள் கௌரவிப்பு

(பாறுக் ஷிஹான்)

2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் கல்விசாரா மற்றும் நிருவாக உத்தியோகத்தர்களின் சிறுவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு தென் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் முனாஸ் மொஹீதின் தலைமையில் நூலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மிக விமரிசையாக நடைபெற்றது.



இந்நிகழ்வானது பல்கலைக்கழக வரலாற்றில் ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் கலாநிதி . யு .எல் .அப்துல் மஜீட் அவர்களும் கௌரவ அதிதியாக பதிவாளர் எம் .ஐ . நௌபர் , பல்கலைக்கழக பதில் நூலகர் எம் . சி.எம் . அஷ்வர் அவர்களும் விஷேட அதிதியாக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்க தலைவர் எஸ்.எல் .எம் தாஹிர் அவர்களும் கலந்து சிறப்பித்தினர் .

இந்த நிகழ்வில் புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த 30 மாணவர்களுக்கும் ஊழியர் சங்க தலைவர், செயலாளர் பதிவாளர், உபவேந்தர் அவர்களால் ஒப்பமிடப்பட்ட சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இதில் விசேட அம்சமாக சித்தியடைந்த பிள்ளைகளின் பெற்றோர்களான உத்தியோகத்தர்களது பெயரினையும் பிள்ளைகளது பெயரினையும் பதிவாளர் அவர்களே உத்தியோகபூர்வமாக அறிவித்து அவர்களை அழைத்து உபவேந்தர் அவர்களினது பொற்கரங்களால் வழங்கப்பட்டது.

# கிண்ணியாவில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் வீடு முற்றாகச் சேதம்



(ஹஸ்பர்)

இரவு கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் பல தென்னை மரங்களையும், வாழை, முதலான பயிர்களையும் துவம்சம் செய்து உள்ளதோடு, ஓர் ஏக்கருக்கு மேற்பட்ட வேளாண்மைகளையும் துவம்சம் செய்துள்ளது என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் திருகோணமலை மாவட்ட, கிண்ணிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வெல்லாங்குளம் ,மஜீத் நகர் முதலான பகுதிகளில் சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

மனிதன் யானை மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும் அவற்றையும் மீறி சில அசம்பாவிதங்கள் நடைபெறாமலும் இல்லை.

அந்த வகையில்,கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்லாங்குளம் பகுதிக்குள் இரவு நுழைந்த காட்டு யானைகள் தென்னை, கத்தரி முதலான பயிர்களையும் வேளாண்மைகளையும் நாசமாக்கி உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். வீடொன்ரையும் துவம்சம் செய்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால்தமதுவாழ்வாதாரம்பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். இதேவேளை பல தென்னை மரங்களையும், வேளாண்மையும் நாசமாக்கி உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானையை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஓர் ஏக்கர் வயல் நிலங்களை நாசமாக்கி விட்டது

இந்துப்பகுதிகளில்யானைகளின்தொல்லைஅதிகமாக இருக்கின்றது. இது எங்களுடைய வாழ்வாதாரம் தென்னை, முதலானவற்றையும் அழித்து விடுகின்றன.

ஒவ்வொரு இரவும் வந்து இவ்வாறான நாசத்தை செய்கின்றது. இரவு நேரங்களில் எங்களுக்கு ஓர் அசம்பாவிதம் நடந்தால் வெளியில் செல்ல முடியாது இதற்கு அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

அதிகாரிகளுக்கு அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை தென்னை மரம் முதலானவத்தையும் முறித்துள்ளது. இரவு நேரங்களில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது சின்னக்குழந்தைகளை வைத்துக் கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் பாதுகாப்பு வேண்டும். சரியான முடிவு பெற்றுத் தர வேண்டும்.

இரவு வந்த யானைகள் தென்னை மரம் மரங்களை வேளாண்மையை அழித்துவிட்டது.நாங்கள்பெரும் துன்பத்துக்கு மத்தியில் வாழ வேண்டிய நிலைஏற்பட்டுள்ளது. அரசாங்கம் இதுக்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.




# தோணா பாலம்-மீள் கட்டுமான பணிகளை ஆரம்பிக்க ஏற்பாடு

## மக்கள் எதிர்ப்பு

(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது கடற்கரை வீதி இணைக்கும் தோணா பாலம் உடைந்து விழும் ஆபத்தில் உள்ளதால் செப்பனிட்டு அழகு படுத்துவது பெரும் உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது சாய்ந்தமருது கடற்கரை வீதியில் அமைந்துள்ள மிக பழைமையான தோணா பாலத்தினை சிறு திருத்தங்கள் மாத்திரம் செய்து அழகுபடுத்த முயற்சிக்கும் செயற்பாட்டை பொதுமக்கள் கண்டித்துள்ளதுடன் குறித்த பாலத்தின் கீழ் பகுதியில் உள்ள அபாயகரமான நிலைமையையும் தெளிவு படுத்தினர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாலத்தின் ஊடாக சாய்ந்தமருது பழைய ஆஸ்பத்திரி உப தபாலகம் கமு/கமு/றியாலுல் ஜன்னா வித்தியாலயம் அஷ்ரப் ஞாபகார்த்த பூங்கா, பள்ளிவாசல், மீனவர்களின் கட்டடத்தொகுதி என பல்வேறு அரச தனியார் காரியாலயங்கள் வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றன.


மேலும் இப்பாலத்தின் ஊடாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தொழில் நிமர்த்தம் காரணமாக அதிக பயணங்கங்களை மேற்கொண்டு வருகின்றனர்.அத்துடன் குறிப்பாக அதிக கனரக வாகனங்கள் பயணிப்பதால் தற்போது இந்தப்பாலம் பலத்த சேதத்திற்கு உள்ளாகி உள்ளது.மேலும் கடந்த 2004 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவிலும் குறித்த பாலம் பாதிப்படைந்ததுடன் தற்போது உடைந்து விழும் நிலையில் உள்ளது.


இந்த நிலையில் பாலத்தின் பாதுகாப்பிற்காக உள்ள மேல் தூண்களை மாத்திரமே அகற்றி அழகு படுத்துவதால் எதிர்காலத்தில் பாரிய ஆபத்துகள் இடம்பெறும் என சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்என பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டு இப்பாலத்திற்கான திட்ட வரைபடம் வரையப்பட்டு, குறித்த திணைக்கள நிறுவன அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு முறையான அங்கீகாரம் கிடைத்தன் பிற்பாடு அப்போதைய அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு செயற்பட இருந்த நிலையில் பொருளாதார நெருக்கடி காரணமாக துரதிஷ்டவசமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அபாயகரமாக இருக்கின்ற இப்பாலம் புனர்நிர்மாணம் செய்யும் நிலையில் தற்போது இல்லை என்பதுடன் அதன் அனைத்து மூலப்பொருள்களும் செயலிழந்த நிலையில் உள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச அரசியல்வாதிகள், சம்பந்துப்பட்ட அதிகாரிகள், பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்த புனர்நிர்மாண வேலைக்கு எடுக்கப்பட்ட முடிவை மறுபரிசீலனை செய்து இந்தப்பாலத்தை முற்றாக அகற்றி புதிய பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளுமாறு இப்பிரதேச பொதுமக்கள் சிவில், சமூக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.







காலைக்கதிர் Kalaikkathir

## நட்டஈட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது ஊழல் மோசடி தொடர்பில் விடயங்கள் வெளிக்கொணரும்போது ஆளும்தரப்புக்கு எதிராகச் சதி முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

எதிர்வரும் நாட்களில் சிலர் கைது செய்யப்படலாம். இதற்கு அச்சம் கொண்டுள்ள ஒரு தரப்பு எம்மை இலக்கு வைத்து சில விடயங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வாறாயினும் இந்த ஆளும்தரப்புத் தொடர்பில் மக்களிடத்தில் தெளிவு உள்ளது. மக்கள் பொறுமையுடனேயே இருக்கிறார்கள். எனவே எமக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம்.

43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 122 கோடி ரூபா நட்டஈடு பெற்றுக்கொண்டமைக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்கு தொடுத்து அதனை இரட்டிப்பாக அல்லது மும்மடங்காக அவர்களிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது நாடு என்ற வகையில் செலுத்த வேண்டிய நட்டஈடு அல்ல. அது அவர்கள் செய்த தீமைகளுக்குக் கிடைத்த பயனாகும். எனவே எதிர்காலத்தில் சரியாக வழக்கு தொடர்ந்து நட்டஈட்டை இரட்டிப்பாக அல்லது மும்மடங்காக அவர்களிடமிருந்து அறவீடவேண்டும்

கேள்வி :- சேதங்களை எதிர்நோக்கியவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டது. தீ வைத்தவர்களுக்கு வழக்கு தொடரவில்லையா?

பதில்-: அது தொடர்பில் ஆராய வேண்டும். ஆனால் இதன் முதலாவது குற்றவாளிகளாக அலரி மாளிக்கைக்கு மக்களை அழைத்து வந்து வன்முறைகளை தூண்டிய முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவர்களது மகன்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுடன் தோளில் கைகளைப் போட்டுக்கொண்டு சனத் நிஷாந்த உள்ளிட்டவர்களே அதிக பொறுப்பை ஏற்க வேண்டும். மாலை இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே எமது நிலைப்பாடு என்றார்.

# பனம் தொழிற்துறை சார்பான கடற்தொழில் அமைச்சரின் கருத்திற்கு பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் பாராட்டு

(சுபேசன்)

பனம் தொழிற்துறைக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கடற்தொழில் அமைச்சர் இ. சந்திரசேகரின் நாடாளுமன்ற உரைக்கு பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் மற்றும் பனை சார்ந்த உற்பத்திச் சங்கங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளன.



கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில்; வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டினுடைய 11மாவட்டங்களில் சுமார் 15 மில்லியன் பனை மரங்கள் உள்ளன. இந்த பனை மரங்கள் சார்ந்து 800 இற்கும் மேற்பட்ட உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது நாட்டிற்கு பெருமை சேர்க்கக்கூடிய ஒரு விடயம்.

பெருந்தோட்ட அமைச்சராக சமந்த வித்யாரட்ண நியமிக்கப்பட்டதன் பின்னர் அவர் ஏனைய பயிர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை பனம் பயிருக்கும் கொடுக்கின்றார்.

கடந்த முப்பது வருட காலமாக பனை சார்ந்த தொழிற்துறை நாசம் செய்யப்பட்டுள்ளது. பனை மரங்களை வெட்டி வீசும் நிலை காணப்படுகின்றது.

பனைக்கு என சொந்தமாக நிலம் ஏதும் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு நிலைமையில் தான் பனம் தொழிற்துறைக்கு புத்தெழுச்சி கொடுக்க புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பனம்சாராயம், கள்ளு என அனைத்து உற்பத்திகளுக்குமே உலகச் சந்தையில் மிகப்பெரிய கேள்வி நிலவுகின்றது. அந்த தேவையை பூர்த்தி செய்தால் எதிர்வரும் இரண்டு வருடத்திற்குள் இரண்டரை பில்லியன் ரூபாக்களை வருவாயாக பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனைய துறைகளுக்கான உற்பத்திகளுக்கு உரித்துரிமையை உறுதிப்படுத்துவது போன்று பனை சார்ந்த உற்பத்திகளுக்கான புலமைச் சான்றிதழை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பனை சார்ந்த உற்பத்திச் சங்கங்களுக்கு உரித்துரிமைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேற்படி அமைச்சர் சந்திரசேகரின் கருத்துத் தொடர்பில் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் மற்றும் பனை சார்ந்த உற்பத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்; -

பனை சார் விடயங்களை சொத்துரிமையாக அங்கீகரிக்க வேண்டும் என அமைச்சர் நாடாளுமன்றில் கோரியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

பல தசாப்த காலமாக இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன. பனை மரம் பல உற்பத்திகளை தன்னகத்தே கொண்டிருப்பதுடன் - சுற்றுச்சூழலுக்கும் நன்மை ஏற்படுத்தக்கூடியது.

இந்த பனை சார் உற்பத்திகளை எமது சொத்துரிமைகளாக அங்கீகரிக்கப்பட வேண்டியது அவசியம்.

பனைசார்ந்த உற்பத்திகள் மற்றும் உற்பத்தியாளர்களின் நலனுக்காக செயற்பட்டுவரும் பெருந்தோட்ட அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பெருந்தோட்ட பிரதி அமைச்சர் சு.பிரதீப் மற்றும் கடற்தொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் ஆகியோருக்கு பனை அபிவிருத்திச்சபை சார்பாக மனமார்ந்த நன்றிகள் என மேலும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

# பாடசாலைகள் மற்றும் கல்வி வலயத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(அபு அலா, முபீன்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் திருகோணமலை வடக்கு (கோமரன்கடவல) கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் குழுவிற்கும் இடையே கலந்துரையாடல் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது, பாடசாலைகளிலும் கல்விவலயத்திலும் நிலவும் பிரச்சினைகள் குறித்து அதிபர்களால் தெரிவிக்கப்பட்டன. இதன்படி, பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பான பிரச்சினைகள், கற்பித்தல் சேவையில் ஈடுபடும் தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள், பாடசாலைகளில் நில உரிமை தொடர்பான பிரச்சினைகள், பாடசாலைளில் பௌதீக வளங்களின் பற்றாக்குறை, கல்விசாரா ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் கல்வி வலய அலுவலகத்தில் உள்ள பணியாளர் வெற்றிடங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.



காலைக்கதிர் Kalaikkathir

# கற்றல் ஊக்குவிப்புக்கான நிதி உதவி

(றிபாஸ்)

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட பல பாடசாலைகளுக்கு கற்றல் ஊக்குப்புக்கான நிதி உதவியை முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹீர் தலைமையிலான குடும்ப உறுப்பினர்கள் வழங்கி வருகின்றனர்.



சம்மாந்துறை வளத்தாப்பிட்டி தாஹீரா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பல மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான நிதியுதவி வழங்கிவைக்கும் நிகழ்வு அதிபர் ஏ.ஆர்.எம்.கலீல் தலைமையில் இடம் பெற்றது.



இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மாஹீர் அவரது சகோதரி, ஓய்வு பெற்ற அதிபர் சரீனா முஹம்மத் மற்றும் சமூக செயற்பாட்டாளர் ஆஸீக் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

இதேவேளை கடந்த காலங்களில் அதிகமான பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்க ணக்கான மாணவர் களுக்கு இவ்வாறான நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

# ஐஸ் போதைப் பொருளுடன் கைதானவரிடம் விசாரணை

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளுடன் பிரபல பாடசாலைக்கு அருகில் கைதான 34 வயது சந்தேக நபர் தொடர்பில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலைக்கு அருகில் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் சம்மாந்துறை பகுதி புளக் ,ஜே கிழக்கு 03 பிரிவு பகுதியை சேர்ந்த 34 வயதுடையவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து 1 கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்தது.

அத்துடன் சந்தேக நபர் உட்பட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் இந்த கைது நடவடிக்கையானது களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.பி.ஏ. தில்சான் தலைமையிலான விசேட அதிரடிப் படை அதிகாரிகள் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.







காலைக்கதிர் Kalaikkathir

# வட்டுக்கோட்டை துணைவி பிரகேதீஸ்வரர் ஆலய மீள்புனரமைப்புப் பணி ஆரம்பம்

வட்டுக்கோட்டை துணைவி ஆலயத்தை மீள் புனரமைப்பு செய்யும் பணி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் இப்பணிகள் ஆரம்பமாகின.

மிகத் தொன்மையான எமது முன்னோர்களின் வழிப்பாட்டுத் தலமான இவ்வாலயம் பல ஆண்டு காலம் கவணிப்பார் இன்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள் உருவாக்கம் செய்வதற்கு நீண்ட காலம் முயற்சி எடுக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது அமெரிக்காவில் வசிக்கின்ற கைதடியைச் சேர்ந்த கலாநிதி சிவயோகநாதனின் மகள் பாலயோகஸ்தினி சிவயோகநாதன் இவ்வாலயத்தை பழைய நிலைக்கு மீள் புனரமைப்பு செய்வதற்குரிய நிதியுதவிஷ்யி வழங்கியுள்ளார்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆலயத்தின் புனரமைக்கும் பணிகளில் மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம்



மரபுரிமை மையத்தின் உபதலைவர் சத்திர சிகிச்சைப் பேராசிரியர் ரவிராஜ், இவ்வாலயத்தினை மீள் புனரமைப்பு செய்வதற்குரிய நிதி உதவியை வழங்கிய பாலயோகஸ்தினி சிவயோகநாதன் தந்தை சிவயோகநாதன், யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் செயலாளர் ரமேஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஸ் விரிவுரையாளர் ஜெயதீஸ்வரன் இவ்வாலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் முக்கிய பணியில் இருக்கும் கபிலன், செல்வி துஸ்யந்தி, மணிமாறன் மற்றும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் பத்திராசிரியர்

# போதைப்பொருளை வாங்குவதற்காக சித்தியின் நகையை திருடியவர் உள்ளிட்ட நால்வர் கைது!

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

போதைப்பொருளை வாங்குவதற்காக சித்தியின் நகைகளை திருடிய குற்றச்சாட்டில் 21 வயது இளைஞன் உட்பட திருட்டுக்கு உடந்தையாக செயற்பட்ட 3 இளைஞர்கள் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது -

திருநெல்வேலி பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 03 ஆம் திகதி தங்க நகை திருடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், முறைப்பாட்டாளரின் வீட்டில் வசித்து வந்த, முறைப்பாட்டாளரின் அக்காவின் மகனே திருட்டில் ஈடுபட்ட சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேலும் சந்தேகநபரிடமிருந்து, திருடப்பட்ட நகையில் ஒரு தொகுதியும், ஒரு தொகை பணம் மற்றும் 2 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.



சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் திருட்டுக்கு உடந்தையாக செயற்பட்ட குற்றச்சாட்டில் மேலும் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டில் ஈடுபட்டவர்கள், போதைக்கு அடிமையானவர்கள் எனவும், போதைப்பொருள்களைக் கொள்வனவு செய்யவே திருட்டில் ஈடுபட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம்

மூதூர் பிரதேச செயலகத்திற்கு உற்பட்ட ஆலிம்சேனை மையவாடியில் சனிக்கிழமை கிளீன் சிறீலங்கா வேலை திட்டத்திற்கு அமைவாக சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மூதூர் கிளை மற்றும் ஆலிம்சேனை ஜனாஸா நலன்புரிச் சங்கம் மற்றும் பெரியபால ஜனாஸா நலன்புரிச் சங்கம் அத்தோடு பஹ்ஜதுல் உலூம் அரபுக் கல்லூரி மாணவர்கள் உட்பட பொதுமக்கள் ஒன்றிணைந்து



இந்த சிரமதான பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# இராமகிருஷ்ண மிஷனின் கிளை இன்று கொட்டகலையில் திறப்பு

இராமகிருஷ்ணமிஷனின்மலையகத்துக்கான முதலாவது கிளை கொட்டகலையில் திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளது.

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அத்தோடு பகவான் இராமகிருஷ்ண ஆலயமும், சிவானந்த நலன்புரி நிலையமும் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்புரையை நிகழ்த்தவுள்ளதோடு பிரதம அதிதியாக உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்களின் துணைத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்த ஜி மகராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும், காசி இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி சர்வரூபானந்த ஜி மகாராஜ், மதுரை இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி நித்யதீபானந்த ஜீ மகராஜ் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளதோடு கும்பாபிஷேக கிரியைகளை சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள் முன்னெடுக்கவுள்ளார்.

இதேவேளை, கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நேற்று கொட்டகலை பிரதேசத்தில் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.





# புளியங்கூடல் கிராம அபிவிருத்தி சங்க விசேட பொதுக் கூட்டம்

புளியங்கூடல் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 1.30 மணிக்கு புளியங்கூடல் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் இறைவணக்கம், தலைமையுரை, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உரை, "தூய்மைமிகு இலங்கை" என்னும் தொணிப்பொருளின் செயல் திட்டம் தொடர்பில் விளக்கமளித்தல், கிராம அபிவிருத்தி சார் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்தல், நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுபெறும்.

காலைக்கதிர் Kalaikkathir

# கண்டல் பாதுகாப்பு குறித்து கற்பிட்டியில் கலந்தாய்வு

(சி0யாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தின் சிறு கடலை அண்டிய பகுதிகளில் காணப்படும் கண்டல் தாவரங்கள் பல்வேறு நபர்கள் மற்றும் சில தேவைப்பாடுகள் நிமித்தம் அழிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்துவது தொடர்பாக விஷேட செயற்திட்டம் உருவாக்கல் பற்றிய கலந்துரையாடல் செடோ ஸ்ரீ லங்கா தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் செடோ ஸ்ரீலங்கா நிர்வாக பொறுப்பாளர் ஏ.ஆர்.எம் ஹாபிஸ் , செடோ ஸ்ரீலங்கா ஊடக இணைப்பாளர் சனீர் சஜான், செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் நிருவன மேற்பார்வையாளர் எஸ்.எப் சுஜானா மற்றும் சமூக செயற்பாட்டாளர் சபுறுல்லாஹ் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# செயலமர்வு

(ஸாகிர்)

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸின் வழிகாட்டலின் கீழ் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மொனராகலை ஜம்இய்யத்துல் உமாவுடன் இணைந்து, பகினிகஹவலை ஹபினஸ் கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இச்செயலமர்வில் சுமார் 32 பள்ளிவாசல்களின் 100 இற்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்த கருத்தரங்கில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், பள்ளிவாசல் எவ்வாறு ஒரு சமூக மையமாக செயற்படுவது, இலங்கை வக்பு சபை, இலங்கை வக்பு நியாய சபை மற்றும் முஸ்லிம் தரும நம்பிக்கை பொறுப்புகள் ஆகியன தொடர்பில் நம்பிக்கையாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டன.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அறிமுகமும் அதன் சேவைகள் தொடர்பான தொடக்க உரையை திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஐ.எம். பிர்னாஸ் நடத்தினார். உதவிப் பணிப்பாளர் எம்.எஸ் அலா அஹ்மத், வக்பு பிரிவின் அதிகாரி அஷ்ஷேக் எம்.ஐ.முனீர், வக்பு நியாய சபை பதில் செயலாளர் எம்.என்.எம். ரோஸன், ஆகியோர் கலந்து கொண்டு தெளிவுரைகளை வழங்கினர். மேலும் இந்த கருத்தரங்கினை வக்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம். ஜாவித் தொகுத்து வழங்கினார்.





# ஒரு லட்சம் ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்

(கேதீஸ்)

தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீகதிரேசன் ஆலயத்தின்வருடாந்ததைப்பூசதிருவிழாவின் 7ஆம்நாள்மாம்பழத்திருவிழா சனிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பூஜையின்பின்னர் முருகப்பெருமானுக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஏலத்தில் விடப்பட்டது. அம்மாம்பழம் ஒரு லட்சம் ரூபா வரை பக்தர்களால் ஏலம் கேட்கப்பட்டது.

இதன்போது ஏலம் விடப்பட்ட அம்மாம்பழத்தை தலவாக்கலை நகரில் இயங்கும் ஜப்னா ஸ்டோர்ஸ் உரிமையாளர் ஜெகமோகன் ஒரு லட்சம் ரூபா பணத்தை செலுத்திமாம்பழத்தை பெற்றுக்கொண்டார்.





# ஹாஃபிழ் பட்டம் பெற்றார் காயல்பட்டணம் அஹமது

(ஸாகிர்)

காயல்பட்டணம் மஹ்ழரதுல் காதிரிய்யா அரபிக் கல்லூரியின் 158ஆம் ஆண்டு நிறைவு விழாவும் மௌலவி - ஆலிம் மஹ்ழரி, ஹாஃபிழ் பட்டமளிப்பு விழாவும் காயல்பட்டணம் மஹ்ழரா வளாகத்தில் இடம்பெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவில், காயல்பட்டணம் மஹ்ழரதுல் காதிரிய்யா அரபிக் கல்லூரியில் கல்வி கற்ற காயல்பட்டணத்தைச் சேர்ந்த

கே.ராசிக் முஸ்ஸம்மில் அவர்களின் மகன் ஆர்.எம்.அஹமது நவாஸ் ஹாஃபிழ் பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.



கேரளா, கோடம்புழா, தாருல் மஆரிஃப் ஷரீஅத் கல்லூரியின் ஸ்தாபகர், மௌலானா, மௌலவி. அல்ஹாஜ் அஷ்ஷெய்க் கலமுல் இஸ்லாம். அப்துர்ரஹ்மான் பாவா முஸ்லியார் மற்றும் மஹ்ழரத்துல் காதிரிய்யா அரபிக்கல்லூரி முதல்வர் மௌலானா மௌலவி, அல்ஹாஃபிழ், அல்ஹாஜ் அஸ்ஸெய்யித் அப்துர் ரஹ்மான் பாக்கவி ஃபாழில் அஹ்ஸனி (ஆ.யு.) ஆகியோர் இணைந்து இப்பட்டத்தை வழங்கி வைத்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(சியாஜ்)

கற்பிட்டி தில்லையூர் கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கற்பிட்டி மஹ்தி பவுண்டேஷன் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை தில்லையூர் மீனவ சங்க கூட்ட மண்டபத்தில் தில்லையூர் மீனவ சங்கத் தலைவர் சபுறுல்லாஹ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்மஹ்தி பவுண்டேஷன் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மில், தில்லையூர் பள்ளிவாசல் பேஷ் இமாம் றிப்கான் (றஹ்மானி), பள்ளிவாசல் தலைவர் அன்வர்தீன், சுகாதார வைத்திய உத்தியோகத்தர் றஸ்மி ஆகியோர்



கலந்து கொண்டனர்.

கல்விக்கு கரம் கொடுப்போம் எனும் மஹ்தி பவுண்டேஷன் வேலைத்திட்டத்தின் மூன்றாவது நிகழ்வாக இது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனை வலய அதிபர்கள்சங்க முப்பெரும் கௌரவிப்பு நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலயம் இறுதியாகவெளியானசாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியாக இரண்டாம்இடத்தைபெற்றதை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும்,கல்முனைவலயக்கல்வி பணிமனை கணக்காளராக இருந்து சமுர்த்தி திணைக்கள பிரதம கணக்காளராக பதவி உயர்வு பெற்று செல்லும் வை. ஹபீபுல்லாஹ்கின் சேவைநலன் பாராட்டு நிகழ்வும், கல்முனை வலயக்கல்வி பணிமனைக்கு புதிய கணக்காளராக நியமனம் பெற்று வருகை தந்திருக்கும் கே. லிங்கேஸ்வரன் அவர்களை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வும் கல்முனைகல்விவலய அதிபர்கள் சங்க ஏற்பாட்டில் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை வரவேற்பு மண்டபத்தில் சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

கல்முனை கல்வி வலய அதிபர்கள் சங்க செயலாளர் அதிபர் எம்.ஐஎம். இல்யாஸின் நெறிப்படுத்தலில் கல்முனை கல்வி வலய அதிபர்கள் சங்க தலைவர் எம். சுந்தர்ராஜனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலய அதிபர்களின் கலை நிகழ்ச்சிகளும்,வாழ்த்துரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம், வலயக் கல்வி அலுவலக பிரதிக்



கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம் ஜாபீர் (நிர்வாகம்), எம்.எச். றியாஸா (கல்வி அபிவிருத்தி), என். வரணியா (திட்டமிடல்), யூ.எல்.றியாழ் (முகாமைத்துவம்), அஸ்மா அப்துல் மலீக் (திட்டமிடல்), யூ.எல்.எம். ஸாஜித், ஏ.சன்ஜீவன், எம்.எல்.எம். முத்தரீஸ் ஆகியோர் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சா.த) பரீட்சையில் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெறுவதற்கு பல்வேறு வழிகளில் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழிகாட்டல்களை மேற்கொண்டமைக்காக பொன்னாடை போர்த்தி நினைவு சின்னங்கள், பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து சமுர்த்தி திணைக்கள பிரதம கணக்காளராக பதவி உயர்வு பெற்று செல்லும் வை. ஹபீபுல்லாஹ் அவர்களையும் கல்முனை வலயக்கல்வி பணிமனைக்கு புதிய கணக்காளராக நியமிக்கப்பட்டிருக்கும் கே. லிங்கேஸ்வரன் அவர்களையும் அதிபர் சங்கத்தால் பொன்னாடை போத்தி நினைவு சின்னங்கள், பரிசுகள் வழங்கி கௌரவம் வழங்கப்பட்டது.



இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய அதிபர் சங்க பொருளாளர் ஐ.எல்.எம். ஜின்னாஹ், அதிபர்கள் சங்க முன்னாள் தலைவர், முன்னாள் செயலாளர், முன்னாள் பொருளாளர் உட்பட நிர்வாகிகள், அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

## கல்முனை உப பிரதேச செயலக விவகாரம்;

# பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவுடன் எம்.பியிடம் நஸீர் ஹாஜி முறையிட்டார்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி அமைச்சருமான வசந்த பியதிஸ்ஸவுடன் கல்முனையைச் சேர்ந்த பிரபல சமூக செயற்பாட்டாளர் ஏ எம் நஸீர் ஹாஜி முக்கிய சந்திப்பு ஒன்றில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பு வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதுடன் கல்முனையில் ஊறிப்போயுள்ள இனவாதம், பிரதேசவாதம் மற்றும் கல்முனை உப பிரதேச செயலக விடயமாக கலந்து பேசிய பின் அதுவிடயமாக ஓர் அறிக்கையையும் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவிடம் நஸீர் ஹாஜி சமர்ப்பித்துள்ளார் .

மேலும் கல்முனை உப பிரதேச செயலக பிரச்சினை என்பது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி தமிழ்த் தேசியகூட்டமைப்பு அரசியல்வாதிகளின் தேர்தல்கால உண்டியல், அதை பிச்சைக்காரன் புண்ணாக வைத்திருக்கவே அவர்கள் விரும்புகிறார்கள்.

முன்புநாடாளுமன்றில் கோடீஸ்வரன் எம்.பி ,முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் எச.எம்.எம். ஹரீஸ், ஆகியோர் இரு கை ஓசையாக மக்களை உசுப்பேத்தினார்கள். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் மட்டும் ஒருகையால் ஓசையின்றி கோசமிடுகின்றார். ஆதலால் அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறும் இதன்போது பிரதி அமைச்சரை கேட்டுக் கொண்டார்.



இவரது இந்தக் கோரிக்கை பிரதி அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ளார் என சமூக ஆர்வலர் கல்முனை சேர்ந்த ஏ எம் நசீர் ஹாஜி தெரிவித்துள்ளார்.

# விசேட அதிரடி படையினரால் ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலைக்கு பின்பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் வெள்ளிக்கிழமை இரவு 07.30 மணியளவில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவரை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

புளக் ஜே கிழக்கு 03, சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.பி.ஏ. தில்சான், சார்ஜன் அஜித், சார்ஜன் குமார, விசேட அதிரடிப் படை பொலிஸ் உத்தியோகத்தர்களான மதுசான், ஜயதிர, தரங்க உள்ளிட்ட அதிகாரிகள் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.02.2025இல் வெளியிடப்பெற்றது